# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

தொலைபேசி எண்: 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283

மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 14 / 2016 நாள்: 30.09.2016

**உள்ளாட்சிப் பதவிகளை ஏலம் விடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை**

தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தல்கள் ஊரகம் மற்றும் நகர்ப்புறங்களில் 17.10.2016 மற்றும் 19.10.2016 ஆகிய தேதிகளில் இரு கட்டங்களாக நடைபெற உள்ளது. இந்த தேர்தல்களில் மக்கள் வாக்களித்து, தேர்தல் மூலம் நிரப்பப்பட வேண்டிய பணியிடங்களைச் சில இடங்களில் ஏலம் விட்டு நிரப்பிட உள்ளதாக செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. இத்தகைய சட்டத்திற்குப் புறம்பான, ஜனநாயக நெறிமுறைகளுக்கு ஊறு விளைவிக்கும் செயல்பாடுகளைத் தடுப்பதுடன், இத்தகைய செயல்களில் ஈடுபடுவோர் மீது சட்டப்பூர்வமான கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அறிவுரைகளை வழங்கியுள்ளது.

மேலும், இதுபோன்ற செயல்கள் மக்களாட்சிக்கு எதிரானவை என்பதை மக்கள் உணரச்செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி).

30.09.16

மக்கள் தொடர்பு அலுவலர்